16/5/2023

ஊடக வெளியீடு

மேதகு சாவ் கொன் இயோவ்

பினாங்கு மாநில முதலமைச்சர்

**14.5.2023 சுங்கை மூடா சம்பவம்: பினாங்கில் நீர் விநியோக பிரச்சனையை ஏற்படுத்திய "தவறான தடுப்பனை" கெடாவில் உள்ளது (பினாங்கில் இல்லை)**

- **2014 இல் நிறுவப்பட்ட கெடா மாநிலத்தின் ஒரு தடுப்பணைக்கான தானியங்கி அமைப்பு "எச்சரிக்கையின்றி (நீர்) வாயிலைத் திறந்தது", இதனால் ஆற்றின் நீர்மட்டம் 1.85 மீட்டரில் இருந்து 0.67 மீட்டராகக் குறைந்தது என்று JPS, கெடா மாநில நீர்வள வாரியத்திடம் தெரிவித்தது.**

பினாங்கு, செவ்வாய், 16 மே 2023: பினாங்கு மாநில அரசாங்கம் மற்றும் பினாங்கு நீர் விநியோக வாரியம் சென் பெர்ஹாட் (PBAPP) பின்வரும் தகவல்களைத் தெளிவாகக் கூற விரும்புகின்றன:

1. 14.5.2023 அன்று **பினாங்கில் நீர் விநியோக பிரச்சனையை ஏற்படுத்திய "தவறான தடுப்பனை" கெடாவில் உள்ளது (பினாங்கில் இல்லை).**

2. 14.5.2023 அன்று, நீர்ப்பாசன மற்றும் வடிக்கால் துறை(Jabatan Pengairan dan Saliran - JPS) பிரிவு கீழ் "சுங்கை மூடா வடிநில நிர்வாகம்"(PLSM) என்றழைக்கப்படும் "கெடா மாநில நீர் ஆதார வாரியம்"(Lembaga Sumber Air Negeri Kedah, LSANK)-க்கு அதிகாரப்பூர்வ கடிதம் ஒன்றை வெளியிட்டது. இக்கடிதத்தில் "சுங்கை மூடாவின் நீர்மட்டத்தில் திடீரென கடுமையான வீழ்ச்சி" ஏற்பட்டதற்கு எதிர்பாராத பழுது தான் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதம் கெடாவில் உள்ள

PBA
Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

LSANKக்கு அனுப்பப்பட்டது தவிர பினாங்கில் உள்ள எந்த துறைகளுக்கும் அல்ல.

3. PLSM அதன் கடிதத்தில் LSANK-க்கு, சுங்கை மூடா தடுப்பணையின் கதவுகளைத் திறப்பதும் மூடுவதும் ஒரு தானியங்கி SCADA அமைப்பின் மூலம் இயக்கப்படுகிறது என்று அறிவித்தது. 13.5.2023 அன்று இரவு 8.30 மணி தொடங்கி 11 மணி நேரமாக, அதன் தானியங்கி அமைப்பு ஒரு கதவை "திறந்து" வைத்தது. காலை 7.30 மணியளவில், சுங்கை மூடா ஆற்றின் நீர்மட்டம் 0.67 மீட்டராகக் குறைந்துள்ளதாக PLSM கண்காணித்துள்ளது.

4. 14.5.2023 அன்று காலை 7.30 மணிக்கு, PLSM சுயமாக அதன் கதவை மூடியது. காலை 8.45 மணி முதல், கெடாவில் உள்ள பெரிஸ் அணை மூலம் ஆற்றின் மட்டத்தை உயர்த்த 15 கனஅடி நீரை திறக்கத் தொடங்கியது.

பினாங்கு மாநில அரசாங்கம் பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறது:

- **PLSM கடிதம் கெடாவின் LSANK-க்கு அனுப்பப்பட்டது, தவிர பினாங்கிற்கு அல்ல.**
- 
- **கெடா மாநில PLSM சுயமாக அதன் கதவை மூடியது, தவிர PBAPP அல்லது பினாங்கில் உள்ள வேறு எந்த அரசு துறைகளும் அல்ல.**

- **சுங்கை மூடா நதி முகப்பில் இருந்து 9 கிமீ தொலைவிலும், PBAPP இன் செபராங் பிறை, லஹார் தியாங் இன்டேக்கிலிருந்து 5 கிமீ தொலைவிலும் இரண்டு தடுப்பணைகள் அமைந்துள்ளன. 1973 இல் கட்டப்பட்ட முதல் 1.8மீ தடுப்பணை பினாங்கு அதிகாரத்தின் கீழ்**

**அமைந்துள்ளது. இரண்டாவது 2.1மீ தடுப்பணை கெடா அதிகாரத்தின் கீழ் உள்ளது.**

- **14.5.2023 அன்று "செயலிழந்த" தடுப்பணை கெடா அதிகாரத்தின் கீழ் அமைந்துள்ளது.**

15.5.2023 அன்று வெளியிடப்பட்ட ஒரு ஆன்லைன் ஊடக அறிக்கையில், "தெற்கு கெடாவில் மற்றும் செபராங் பிறை பெருநில சில பகுதிகளில் ஏற்பட்ட நீர் விநியோகத் தடைகளுக்கு பக்கத்து மாநிலமான பினாங்கின் அருகாமையில் உள்ள சுங்கை மூடாவின் பழுதடைந்த தடுப்பணையைச் சரிசெய்ய பினாங்கை வலியுறுத்துவதாக" கெடா மந்திரி பெசார் (MB) மேற்கோள் காட்டினார்.

https://www.nst.com.my/news/nation /2023/05/909645/sanusi-tells-penang -govt-fix-faulty-sg-muda-barrage-gate

இந்த அறிக்கையின் தகவலகள் தவறு மற்றும் தவறாக வழிநடத்தப்படுகிறது.

**கெடா MB உண்மையிலேயே இந்த அறிக்கையை வெளியிட்டிருந்தால், அவர் சரியான தகவல்களைப் பெற்றுக் கொண்டு, முறையான அறிக்கையை வெளியிட வேண்டும். பினாங்கு மற்றும் அதன் மாநில மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வேண்டும்.**

**கெடா MB, செய்தி அறிக்கையில் தவறாக மேற்கோள் காட்டியிருந்தால், அந்தச் செய்தியை வெளியிட்ட ஊடக நிறுவனத்திடம் பிரச்சனையைத் தெரிவித்து, அதனை திருத்தம் செய்து வெளியிடுமாறு கேட்க வேண்டும்.**

தயவு செய்து தவறான அல்லது போலியான செய்திகளால் பினாங்கு மக்களை குழப்பவோ அல்லது தவறாக வழிநடத்தவோ முயற்சிக்காதீர்கள். 14.5.2023 அன்று, கெடாவில் நடந்த ஒரு விபத்து

பினாங்கில் 400,000 நீர் பயனீட்டாளர்களுக்கு துன்பத்தை ஏற்படுத்தியது. இதுவே உண்மையான தகவலாகும்.

நன்றி.

---